**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**ஹஜ்ஜுப் பெருநாள் பிரசங்கம்**

**24 செப்டம்பர் 2015 / 10 துல்ஹஜ் 1436**

**<u>குர்பானியின் மதிப்பை உணர்தல்</u>**

الله أَكْبَرُ **9x**

الله أَكْبَرُ، مَا تَقَرَّبَ الْعَبْدُ بِقُرْبَانْ.

الله أَكْبَرُ، مَا رَغِبَ الْعَابِدُوْنَ فِي الْغُفْرَانْ.

الله أَكْبَرُ، مَا حَمِدَهُ اْلإِنْسُ وَالْجَانْ.

الله أَكْبَرُ، مَا جَرَتِ الْكَوَاكِبُ بِحُسْبَانْ.

الله أَكْبَرُ، الله أَكْبَرُ، الله أَكْبَرُ.

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَاللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَللهِ الْحَمْدُ.

اَلْحَمْدُ للهِ الَّذِى جَعَلَ هَذَا الشَّهْرَ وَجَعَلَ عِبَادَةَ الْحَجِّ وَعِيْدَ الأَضْحَى مِنْ شَعَائِرِ اللهِ وَإِحْيَاءَهَا مِنْ تَقْوَى الْقُلُوب. أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ. وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الْمَبْعُوْثُ رَحْمَةً لِّلعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ.

أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، إِتَّقُوا اللهَ، وَأُوْصِيكُمْ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இப்புனிதமிக்க காலைப் பொழுதில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நமது நன்றிக் கடனைச் செலுத்துவதோடு, அல்லாஹ்வைப் புகழ வேண்டுமெனவும் இறை நம்பிக்கையில் எனது சகோதர, சகோதரிகளாக உள்ள உங்கள் அனைவரையும் நான் மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மீது கொண்டுள்ள அன்பு மற்றும் கிருபையின் காரணமாக "ஈமான்" எனும் இறை நம்பிக்கையையும், வாழ்க்கையையும் அவன் நமக்கு வழங்கியுள்ளான். ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காகச் சென்றுள்ள நமது சகோதர, சகோதரிகளின் நற்காரியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும், அவர்கள் உடல் நலத்துடன் பாதுகாப்பாக இருக்க வேண்டும்; பரிசுத்தமான நிலையில், மன நிம்மதியுடன் தமது வீடுகளுக்குத் திரும்ப வேண்டுமெனவும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! மேலும், துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களில் நாம் செய்த நற்காரியங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம். நம்மனை வருக்கும் அல்லாஹ்வின் மன்னிப்பும், அருட்களும் கிடைக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

அன்புமிக்க ஜமாஅத்தார்களே!

துல்ஹஜ் மாதம் ஹஜ்ஜுக் கடமையின் மகிமையை நமக்கு நினைவூட்டும் மாதமாகும். அல்லாஹ்வின் வீடாகிய க:்பத்துல்லாஹ்வில் ஒன்று கூடுவதற்காகச் சென்றுள்ள உள்ளங்கள் ”நி:்மத்” எனும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் உச்சகட்டமாக வழங்கப்பட்டவையாக உள்ளன. காரணம், க:்பத்துல்லாஹ் இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) மற்றும் அவர்களின் அன்பு மகனார் இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களால் கட்டப்பட்டதாகும். க:்பத்துல்லாஹ் இன்று வரை இஸ்லாமியச் சடங்கின் சின்னமாக தொடர்ந்து இருந்து வருகிறது. புனித ஹஜ்ஜுக் கடமையானது, க:்பத்துல்லாஹ்வை ”தவா:்பு” செய்வது (வலம் வருதல்), ”அர:்பா” மைதானத்தில் ஒன்று கூடுதல் போன்ற பல சடங்குகளுடன் பரிபூரணமாக நிறைவேற்றப்படுகின்றது. நாம் இச்சடங்குகளை துல்லியமாக ஆய்வு செய்து பார்த்தால் ஹஜ்ஜின் சடங்குகளில் எதுவும் முக்கியமற்றதாகவோ, அர்த்தமற்றதாகவோ இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். புனித ஹஜ்ஜுப் பயணம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் சந்நிதானத்தில் நாம் நிற்கும் போது பணிவை நமக்கு போதிக்கின்றது. எவர்கள் அல்லாஹ்வுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்களோ அவர்களுக்கு அப்பயணம் உச்சகட்டமான ஆன்மீகப் பயணமாக உள்ளது. புனித ஹஜ்ஜுக் கடமை, மற்றவர்களுடனான நமது பழக்கங்கள் மற்றும் கொடுக்கல், வாங்கலில் விழிப்புணர்வுடனும், உணர்வுப்பூர்வமாகவும் இருக்கத் தூண்டுகிறது.

”அர:்பா” மைதானத்தில் ஒன்று கூடுவது ஹஜ்ஜுக் கடமையின் முக்கிய அம்சமாக உள்ளது. ஆண்கள், பெண்கள், ஏழை, பணக்காரர் அனைவரும்

சாதாரணமான, அலங்காரமற்ற ஆடைகளை அணிந்து கொண்டு ஒன்று கூடுகிறார்கள். நமது செல்வங்கள், பதவிகள், இனம், பரம்பரை போன்ற உலக சம்பந்தமான உடைமைகள் எவையும் அல்லாஹ்வின் பார்வையில் ஒன்றுமில்லையென "அர.்பா" தினத்தின் காட்சிகள் நமக்கு நினைவூட்டுகின்றன. நமது "தக்வா" எனும் பக்தியும், நமது உள்ளங்களின் தூய்மையும், "இபாதத்" (வணக்க வழிபாடுகள்) செய்வதில் நமது திடமான நம்பிக்கையும், நன்மைகளைப் பரப்புவதில் நமது ஆர்வமும் தான் அல்லாஹ்வின் பார்வையில் மிக உயர்வான விஷயங்களாகும். நாம் பூமியில் எவ்வளவு தான் செல்வாக்குமிக்கவர்களாக இருந்தாலும் இறுதியில் நாம் அனைவரும், நமது உடலில் சிறு துண்டு துணிகளால் "க.்பன்" செய்யப்பட்டு (போர்த்தப்பட்டு) அல்லாஹ்வின் பக்கம் திரும்ப இருக்கின்றோம். அவ்வுடலும் அந்த துணிகளும் சில நாட்களில் அழிந்து விடும். நமது உடைமைகள் அனைத்தை விட்டும் நாம் பிரிய இருக்கின்றோம். நமது உடைமைகளும் நம்மை விட்டும் பிரிந்து விடும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அஷ்-ஷூ.்ரா" எனும் அத்தியாயத்தின் 88-89 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

يَوْمَ لَا يَنفَعُ مَالٌ وَلَا بَنُونَ ﴿٨٨﴾ إِلَّا مَنْ أَتَى ٱللَّهَ بِقَلْبٍ سَلِيمٍ ﴿٨٩﴾

பொருள்: அந்நாளில், செல்வமும் பிள்ளைகளும் எவ்வித பயனும் அளித்திடமாட்டா; ஆனால் எந்த மனிதர் தூய்மையான உள்ளத்தோடு அல்லாஹ்வின் சமூகத்திற்கு வருகை தருகின்றாரோ அவரைத் தவிர.

எனது அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

பணிவான உள்ளத்தையும் ஆன்மாவையும் பெற்றுள்ளவர்கள் அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெறுகிறார்கள். இவ்விதமான உள்ளங்களும் ஆத்மாக்களும் நன்மைகள் எனும் பழங்கள், மனிதத்தன்மை, அன்பு மற்றும் கிருபை விளையும் வளமான நிலத்தைப் போன்றதாகும். எனவே தான், இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள்:

"எவரொருவர் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றும் போது "இஹ்ராம்" உடைய நிலையில், மனைவியுடன் தொடர்பு கொள்ளாமலிருக்கின்றாரோ, எவ்வித பாவத்தையும் புரியாமலிருக்கின்றாரோ அவர் அன்று பிறந்த பாலகரைப் போன்று குற்றமற்றவராகத் திரும்புகிறார்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

எனது அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

எனவே தான், சக மனிதர்களோடு நாம் பழகுவது, கொடுக்கல், வாங்கல் செய்து கொள்வது போன்றவற்றைப் பொருத்தே, நாம் புரியும் ஹஜ்ஜு எனும் வணக்க வழிபாடு பரிபூரணமானதாக அமையும் என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இவ்வுண்மையானது, அல்லாஹ்வுடனான நமது உறவு முன்னேற்றமடைய வேண்டுமெனில், சக மனிதர்களுடனான நமது உறவு முன்னேற்றம் பெறுவது அவசியம் எனவும் உணர்த்துகிறது.

மேலும், நமது "ஈமான்" (இறை நம்பிக்கை) நம்மை நல்ல மதிப்பீடுகளின் பாலும், நாம் நிறைவேற்றும் சடங்குகள் பரிசுத்தமான, நற்குணங்களால்

அலங்கரிக்கப்பட்ட உள்ளத்தின் பாலும் நம்மை அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும். நாம் சடங்குகளை நிறைவேற்றுவதற்கு கடின முயற்சி செய்கிறோம்; ஆனால், அதே சமயம், நற்குணங்களுடன் கூடிய சிறந்த மனிதர்களாக நாம் ஆகுவதற்கு முயற்சிக்கவில்லையெனில், நாம் நம்மைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். அவ்வாறு சிந்தித்துப் பார்க்கவில்லையெனில் நமது உள்ளங்களிலும் சிந்தனைகளிலும் குறைபாடுகள் ஏற்பட்டு விடும்; அவை நமது ”இபாதத்” (வணக்க வழிபாடுகள்) மற்றும் நற்காரியங்களைப் பாதிக்கலாம்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

அன்பிற்கினிய ”முஸ்லிமீன்” ”முஸ்லிமாத்” களே! (முஸ்லிமான ஆண்களே! முஸ்லிமான பெண்களே!)

ஹஜ்ஜின் உச்சகட்ட நிலையானது, ”அரஃபா” தினத்தில் ”அரஃபா” மைதானத்தில் மனிதர்கள் ஒன்று கூடுவதாகும். ஏக இறைவனாகிய அல்லாஹ்விடம் அவனது அருட்கொடைகளைக் கெஞ்சிக் கேட்பதற்காக உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் அங்கு ஒன்று கூடுவதைப் பார்க்கலாம். இது சாதாரணமான கூட்டம் அல்ல; பல வகையான மனிதர்களைப் படைத்துள்ளதில் அல்லாஹ்வின் மகிமையைச் சிந்தித்துப் பார்க்க அக்கூட்டம் தூண்டுகிறது. ஒரே விதமான இந்திரியத் துளியிலிருந்து வெளியாகும் மனிதகுலம் பல தோற்றங்களுடன், பல மொழிகள், பல கலாச்சாரங்கள் மற்றும் சிந்தனைகளுடன் காணப்படுவது

ஆச்சரியத்தைத் தருவதல்லவா? ஹஜ்ஜில் காணப்படும் மற்ற ஜமாஅத்தார்களுடன் நாம் ஒன்று கூடும் நிகழ்ச்சி, மனிதர்கள் பலதரப்பட்ட வகையில் இருப்பது அல்லாஹ்வின் விருப்பமாகும், அது அவனது மகிமையைச் சுட்டிக் காட்டும் அடையாளமாகும் என நமக்கு நினைவூட்டுகிறது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”ஹூத்” எனும் அத்தியாயத்தின் 118-119 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

وَلَوْ شَاءَ رَبُّكَ لَجَعَلَ النَّاسَ أُمَّةً وَاحِدَةً ۖ وَلَا يَزَالُونَ مُخْتَلِفِينَ ﴿١١٨﴾
إِلَّا مَن رَّحِمَ رَبُّكَ ۚ وَلِذَٰلِكَ خَلَقَهُمْ ۗ وَتَمَّتْ كَلِمَةُ رَبِّكَ لَأَمْلَأَنَّ
جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ ﴿١١٩﴾

பொருள்: உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான்; (அவன் அப்படி ஆக்கவில்லை). அவர்கள் எப்போதும் வித்தியாசமாகிக் கொண்டே இருப்பார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர. இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கின்றான்; ”நிச்சயமாக நான் ஜின்கள், மனிதர்கள் ஆகிய யாவரைக் கொண்டும் நரகத்தை நிரப்புவேன்” என்ற உம் இறைவனுடைய வாக்கும் பூர்த்தியாகி விடும்.

மேற்கண்ட வசனமானது, மனிதர்களிடம் வித்தியாசமான நிலை காணப்படுவது அல்லாஹ்வின் விருப்பம் என நமக்குப் போதிக்கிறது. டாக்டர் ”தாஹா ஜாபிர் அல்வானி” அவர்கள் தனது ”அதபுல் இக்திலா∴ப்” எனும் நூலில்: ”வேற்றுமைகள் ஒற்றுமையின்மைக்குக் காரணமாக அமையாது; எனினும் நமது வேற்றுமைகள் பரிசுத்தமான உள்ளங்களாலும் நற்குணங்களாலும் வழிநடத்தப்படவில்லையெனில், நமது உள்ளங்களில் ஏற்படும் வெறுப்பு, பழிவாங்கும் எண்ணம், நான் என்னும் அகங்காரம் போன்றவற்றை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில், அந்நிலையில், நமது வேற்றுமைகள் ஒற்றுமையின்மைக்குக் காரணமாக அமையலாம்” என்று கூறுகிறார்கள்.

எனவே, நமது கருத்துக்கு முரண்பட்ட கருத்துடையவர்களை நாம் சந்திக்கும் போது முதன்முதலாக, நமக்கு மத்தியிலான பொது விஷயங்களை முன்னிலைப் படுத்திக்கொள்ள வேண்டும். ஜமாஅத்தார்களே! சிந்தித்துப் பாருங்கள்! பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் இனங்களைக் கொண்ட ஹாஜிகள் ”அர∴பா” எனப்படும் ஒரு குறுகிய இடத்தில் ஒன்று கூடும் போது தப்பெண்ணங்கள், கருத்துவேறுபாடுகள் ஏற்படவே செய்யும். அவ்வாறிருந்தும், ஹஜ்ஜின் வணக்க வழிபாடுகளை தொடர்ந்து அமைதியாக நிறைவேற்றும் ஆற்றலை ஹாஜிகள் எப்படி பெறுகிறார்கள்? அவர்கள் தமக்கு மத்தியில் காணப்படும் ஒன்றுபட்ட விஷயங்களை முன்னிலைப்படுத்திக் கொள்கிறார்கள்; ஏக இறைவனை வணங்கி வழிபடுதல், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுதல், திருக்குர்ஆனை வழிகாட்டியாக அமைத்துக் கொள்ளுதல் ஆகியவை அவ்வொன்றுபட்ட விஷயங்களில் உள்ளவையாகும். மேற்கண்ட விஷயமானது, நாம் நமக்கு மத்தியில் காணப்படும் ஒன்றுபட்ட விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது நமது கருத்துவேறுபாடுகள், சந்தேகங்களை விட்டும் நாம் தூரமாகி விடுவோம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

எனது அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

முஸ்லிம் சமுதாயம் அடிக்கடி தமக்குள் கருத்து வேறுபாடு கொண்டு தர்க்கித்துக் கொள்வதைக் காண்கிறோம். அவர்கள் தமது ஆடைகளை அடிக்கடி மாற்றிக் கொள்வதைப் போல் சிலவேளைகளில்,

கருத்துவேறுபாடு கொள்வதில் மகிழ்வடைகிறார்கள். தமது வகுப்பாரும், தமது கருத்தும் தான் அல்லாஹ்வின் பார்வையில் உண்மையானதென நினைக்கிறார்கள்.

இது போன்ற தவறான சிந்தனைகளின் விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஷைத்தான் நமது உள்ளங்களில் ஊர்ந்து சென்று, அவற்றில் குரோதம், வெறுப்பு, மற்றவர்களை வெல்ல வேண்டுமென்ற தற்பெருமை போன்றவற்றை ஏற்படுத்துகிறான். இது போன்ற தவறான உணர்வுகளை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டும். இது போன்ற சிந்தனைகளிலிருந்து நம்மை நாம் விடுவித்துக் கொண்டு, நமக்கு மத்தியில் ஒன்றுபட முடிகின்ற விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். காரணம், அதுதான் முஸ்லிம்களுக்கு மத்தியிலான உறவுகளைப் பலப்படுத்துவதாகும். நமக்கு மத்தியிலும் முஸ்லிமல்லாத சகோதரர்களுக்கு மத்தியிலும் ஒன்றுபட்டு செயல்படும் முஸ்லிம்களாக நாம் ஆகுவதற்கு நமக்குப் போதிப்பதாகும். நாம் அனைவரும் அல்லாஹ்வின் படைப்புகள் என்பதைக் கவனத்தில் கொள்ளும் போது ஒன்றுபட்டு செயல்படும் சிந்தனை மேற்கொண்டு சிறப்பாக அமையும்.

நம்மால் ஒத்துப் போக முடிகின்ற விஷயங்களில் நாம் கவனம் செலுத்துவதுடன், நாம் எவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டுள்ளோமோ அவர்களுடன் இணைந்து நற்காரியங்களை எவ்வாறு செயல்படுத்த முடியும், சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள முடியும் எனவும் சிந்திக்க வேண்டும்.

ஜமாஅத்தார்களே!

சன்மார்க்கம் சம்பந்தமான நமது கருத்துக்களும், நமது இனங்களும் எவ்வளவு தான் வித்தியாசமானதாக இருந்த போதிலும் நாம் பகிர்ந்து கொண்டு, ஒன்றுபட்டு செயல்படுவதற்கு பல வழிமுறைகள், வாய்ப்புகள் உள்ளன. சிந்திப்பதில் நாம் எவ்வளவு தான் வித்தியாசமானவர்களாக இருந்த போதிலும் வறுமையை ஒழிப்பது போன்ற பொதுவான விஷயங்களில் நாம் ஒன்றுபட முடியும். சமூகம் சம்பந்தமான சவால்களில் சிக்கியுள்ள நமது இளைஞர்களிடம் சகிப்புத் தன்மையை ஏற்படுத்துவது, அவர்களையும் அவர்களின் குடும்பத்தார்களையும்

முன்னேற்றுவது போன்ற விஷயங்களில் நாம் இணைந்து செயல்பட முடியும்.

இது தவிர, சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் விவகாரங்களில் சமூக விழிப்புணர்வை அதிகரிப்பது, அதற்காக உழைப்பது போன்ற விஷயங்களிலும் நாம் ஒன்றுபட்டு செயல்பட முடியும். இதனையும் இதைப் போன்ற இன்னும் எத்தனையோ சவால்களையும் சிங்கப்பூர் வாசிகளான நாமும் மற்ற உலக மக்களும் இணைந்து எதிர்கொள்வதானது நாம் தொடர்ந்து ஒன்றுபட்டு இருக்கின்றோம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இது போன்ற பாடங்களை "அரஃபா" மைதானத்தில் தங்கும் ஹாஜிகளின் மூலம் பெற முடியும். அவர்கள் அந்த மைதானத்தில் தொடர்ந்து ஒன்றுபட்டு, அமைதியாக இருப்பதற்குக் காரணம் பொதுவான குறிக்கோளில் அவர்கள் கவனம் செலுத்துவதாகும். அக்குறிக்கோள் தான், அல்லாஹ்வின் அருட்கொடைகளை அடைய வேண்டும்; தமது ஹஜ்ஜு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆக வேண்டும் என்பதாகும்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

எனது சகோதர, சகோதரிகளே!

நமக்கு மத்தியில் காணப்படும் கருத்துவேறுபாடுகளானது சமூகம், அரசியல், சன்மார்க்கம் போன்ற எவை சம்பந்தப்பட்டவையாக இருப்பினும், அவை எப்போதும் நமக்குள்ளான புரிந்துணர்வுடன் கூடியதாக இருக்க வேண்டும். நம்மில் ஏதாவதொரு சகோதரரின் கருத்துக்கள் தீவிரமானதாகவோ, நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாததாகவோ இருப்பின் அவருடன் மரியாதையாக விவாதிக்கலாம். சமூக ஊடகங்களில் அடிக்கடி தர்க்கித்துக் கொள்பவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களாக நாம் ஆகி விடக் கூடாது. அவர்கள், தம்முடன் இணங்காதவர்களை நோவினை செய்கிறார்கள்; அவர்களுக்கு எதிராக இழிவான வார்த்தைகளைப்

பயன்படுத்துகிறார்கள். அவர்கள் ஓடி விட வேண்டும் அல்லது ஒழிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டுகிறார்கள்.

இவை ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட வழிமுறையல்ல; நமது கருத்துக்கு முரண்பட்ட கருத்துடையோரை நேரடியாகச் சந்தித்து, முறையாகவும் மரியாதையாகவும் விவாதிப்பதே சிறந்ததாகும். இதுதான், மரியாதை செய்யத் தூண்டும் வழிமுறையாகும். மரியாதை செய்யாமல் மரியாதையை நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே தான் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”∴புஸ்ஸிலத்” எனும் அத்தியாயத்தின் 34-35 வரையிலான வசனங்களில் பின்வருமாறு கூறுகின்றான்:

وَلَا تَسْتَوِي الْحَسَنَةُ وَلَا السَّيِّئَةُ ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي
بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ ﴿٣٤﴾
وَمَا يُلَقَّاهَا إِلَّا الَّذِينَ صَبَرُوا وَمَا يُلَقَّاهَا إِلَّا ذُو حَظٍّ عَظِيمٍ ﴿٣٥﴾

பொருள்: நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர் உற்ற நண்பரைப் போல் ஆகி விடுவார். பொறுமையாக இருந்தார்களே அவர்களைத் தவிர வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள்; மகத்தான நற்பாக்கியம் உடையவர்களைத் தவிர வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள்.

ஹஜ்ஜுக் கடமையைப் பற்றிய நமது புரிந்துணர்வு, இக்காலையில், நமது உள்ளங்களை இணைக்கட்டுமாக! நம்மையெல்லாம் ஒன்றுபட்ட சமுதாயமாக ஆக்கட்டுமாக! ஆன்மீகத்தில் உறுதியான, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் வெற்றிமிக்க சமுதாயமாக ஆகுவதன் மூலம் நமது சன்மார்க்கத்தை சர்வதேச அளவில் உயர்த்துவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்வோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் எப்போதும், ஒத்த கருத்துக்களில் கவனம் செலுத்துமாறு நமது உள்ளங்களுக்கும் மனதுகளுக்கும் வழிகாட்டுவானாக! பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் இணைந்து முயற்சிக்கச் செய்வானாக! அல்லாஹ் இஸ்லாத்தை மேன்மையடையச் செய்வானாக! அனைவருக்கும் நன்மை மற்றும் சேவைகளைச் செய்யும் தூதர்களாக நம்மை ஆக்குவானாக!

اللهُ أَكْبَرُ ، اللهُ أَكْبَرُ ، اللهُ أَكْبَرُ ،
اللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

சகோதர, சகோதரிகளே! வாருங்கள்! அருள்மிக்க இக்காலைப் பொழுதில், அருள்மிக்க இந்த இடத்தில் அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்வோம்!

யா அல்லாஹ்! யா கவிய்யு! யா மதீன்!

உனது பாதுகாப்பை வழங்குமாறு மிக்க பணிவுடன் உன்னிடம் கேட்டுக் கொள்கிறோம். மோதல்களை எதிர்கொண்டு வரும் எங்களது சகோதர, சகோதரிகளை- அவர்கள் எங்கிருந்தாலும் பாதுகாப்பாயாக!

யா ஹாபிள்! யா முகீத்! எங்களது சகோதர, சகோதரிகளில் எவர்கள் கவலையாகவோ மனச் சோர்வுடனோ காணப்படுகிறார்களோ அவர்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்குவாயாக! அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சவால்களை அவர்கள் எதிர்கொள்வதற்காக அமைதியையும் சகிப்புத் தன்மையையும் அவர்களுக்கு வழங்குவாயாக! கஷ்டங்கள் மற்றும் துன்பங்களை விட்டும் அவர்களை விடுவிப்பாயாக! அவர்களின்

விவகாரங்களை எளிதாக்குவாயாக! அவர்களின் பிள்ளைகளையும், குடும்பத்தார்களையும் அவர்களின் நம்பிக்கையையும் தயவுசெய்து பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! எங்களின் உள்ளங்களை தயவுசெய்து இணைப்பாயாக! உனது அன்பாலும் உனது படைப்புகள் மீது கிருபை கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தாலும் எங்களது உள்ளங்களை நிரப்புவாயாக! உனது தூதர்(ஸல்) அவர்களின் நற்பண்புகளால் எங்களையும் எங்கள் குடும்பத்தார்களையும் அலங்கரிப்பாயாக! உனது சவால்களை எதிர்கொள்வதில் எங்களுக்கு உதவுவாயாக! உன்னைச் சந்திக்கும் போது எங்களுக்கு வெற்றியை வழங்குவாயாக! நாங்கள் பிரார்த்தனையில் கேட்கும் விஷயங்களையும் நாங்கள் எதிர்பார்க்கும் விஷயங்களையும் எங்களுக்கு வழங்குவாயாக! யா முஜீப்! யா ரஹ்மான்! யா ரஹீம்! யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُاللهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ ، وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.